DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No. 32/2025

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.4

Accused produced

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. சுப்பிரமணியன் | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 7th day of July, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது கோயம்புத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்துவருகிறன். அசா 3 எனது அம்மாவின் உடன் பிறந்த சகோதரி ஆவார். எனது சித்தப்பா இறந்து ஒன்றரை வருடங்கள் ஆகிவிட்டது. அதனால் 10 நாட்களுக்கு ஒரு முறை வந்து எனது சித்தியான அசா 3 யை பார்த்துவிட்டு செல்வேன். எனது சித்தப்பா இருந்த காலத்திலிருந்தே அசா 1 பரமேஸ்வரி எனது சித்தி வீட்டில் வேலை பார்த்து வந்தார். அசா 1 பரமேஸ்வரியின் கணவர் லோடு மேனாக வேலை பார்த்து வந்தார். அவருக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் அவரை எனது சித்தி வீட்டில் சம்பவத்திற்கு முன்பு 6 மாத காலமாக இரவு காவலராக பணியாற்றி வந்தார். இவ்வழக்கில் இறந்த நபரை நான் பார்த்துள்ளேன். இவ்வழக்கின் எதிரியை அதிகமாக பார்த்ததில்லை. சம்பவத்திற்கு முன்பு ஒரு முறை பார்த்துள்ளேன். அவர் இறந்த நபர் நீராவியுடன் பார்த்துள்ளேன். அவர் எனது சித்தி வீட்டில் இருந்து தோட்டத்திற்கு பொருட்களை எடுத்து சென்றார். நீராவியும் பரமேஸ்வரியும் எனது சித்தியுடன்

நெருக்கமாக இருப்பார்கள். எனது சித்தி கோயம்புத்தூர் வந்துவிட்டாலும் அவர்கள் இருவரும் வீட்டை பார்த்துக்கொள்வார்கள். கடந்த 30.05.2024 அன்று இரவு 10.00 மணியளவில் நீராவி என்பவர் என்னிடமும் எனது சித்தியிடமும் எதிரி அய்யனாரை வீட்டின் அருகில் குடியிருக்க வைத்துள்ளேன் என்றும், அவர் தினமும் குடித்து விட்டு அசிங்கமாக பேசி வருகிறார் என்றும் தெரிவித்தார். அன்று இது சம்பந்தமாக நீராவிக்கும் அய்யனாருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பு ஏற்பட்டுவிட்டதாகவும் கூறினார். நாங்கள் நீராவியிடம் நீ இதற்குள் தலையிடாதே என்றும் வேலை பார்த்துவா என்றும் அறிவுரை வழங்கினோம். மறுநாள் 31.05.2024 ம் தேதி பகலில் பரமேஸ்வரி வந்து அவரது கணவர் தெரிவித்த விபரத்தையே எங்களிடம் தெரிவித்தார். அன்று இரவு 9.45 முதல் 10.00 மணியளவில் நீராவி எங்கள் வீட்டிற்கு வந்தார். அன்றைக்கும் நீராவிக்கும் அய்யனாருக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்று எங்களிடம் தெரிவித்தார். எனது சித்தி கீழ் தளத்திலும் நான் மேல் தளத்திற்கும் படுக்க சென்றுவிட்டோம். போகும்போது நீராவியிடம் கேட்டை பூட்டிவிட்டு போ என்று சொல்லிவிட்டு சென்றோம். நாங்கள் படுத்துவிட்டோம். இரவு 10.30 மணியளவில் சத்தம் கேட்டது. கீழே இறங்கி வந்தபோது எனது சித்தியும் வெளியில் வந்தார். அங்கு நீராவியும் அய்யனாரும் சண்டைபோட்டுக்கொண்டிருந்தார்கள். நாங்கள் வராண்டாவில் நின்றுகொண்டிருந்தோம். அவர்கள் இருவரும் போர்டிகோவில் நின்று கொண்டு சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். நான் பார்க்கும்போது நீராவி சட்டை இல்லாமல் நின்றுகொண்டிருந்தார். நாங்கள் அவர்களை சத்தம்போட்டோம். அவர்கள் கேட்கவில்லை. அதனால் அசா 1 பரமேஸ்வரிக்கு எனது சித்தி போன் செய்து தகவல் சொல்லி சீக்கிரம் வரச்சொன்னார். பரமேஸ்வரியும் அவரது மகளும் சுமார் 20 முதல் 25 நிமிடத்திற்குள் வீட்டிற்கு வந்துவிட்டார்கள். அவர்கள் வரும்போது இருவரும் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். அசா 1 மற்றும் அசா 2 ன் பின்னாலே மற்றொரு நபரும் வந்தார். அவர்கள் வரும்போது

சின்ன கேட் திறந்துதான் இருந்தது. அது வழியாகத்தான் வந்தார்கள். அவர்கள் வருவதை பார்த்தவுடன் எதிரி அய்யனார் ஆவேசத்துடன் சத்தம்போட்டார். அசா1 மற்றும் அசா 2 தடுக்க முயன்றபோது அய்யனார் கத்தியால் நீராவியின் கழுத்தில் குத்தி கிழித்துள்ளார். நீராவி தடுக்கும்போது அய்யனார் நீராவியின் வயிற்றில் குத்திவிட்டார். நாங்கள் சத்தம் போட போட அய்யனார் பக்கத்தில் யாராவது வந்தால் குத்திவிடுவேன் என்று சொல்லிக்கொண்டே சின்ன கேட் வழியாக சென்றுவிட்டார். பின்னர் எனது சித்தி தனியார் ஆம்புலன்சிற்கு போன் செய்தார். ஆம்புலன்ஸ் வந்தவுடன் நீராவியை அழைத்து சென்றார்கள். ஆம்புலன்சின் பின்னால் அசா 1 மற்றும் அசா 2 மருத்துவமனைக்கு சென்றார்கள். சிறிது நேரம் கழித்து அசா 1 எனது சித்தியின் எண்ணிற்கு போன் செய்து நீராவி இறந்துவிட்டதாக தகவல் தெரிவித்தார். நாங்கள் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கப்போகிறோம் என்று சொன்னார்கள். நாங்களும் கொடுங்கல் என்று தெரிவித்தோம். இது சம்பந்தமாக இராஜபாளையம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த வாக்குமூலம் **அசாஆ 5** ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் நாளிலிருந்து ஒரு மாதத்திற்கு முன்பு எதிரியை பார்த்துள்ளேன். ஒரு மாதம் முன்பு எதிரியை பார்த்ததால் சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் நாளில் அவரை அடையாளம் காணமுடியவில்லை என்றால் சரியல்ல. நான் கோயம்புத்தூரில் 16 ஏக்கர் உள்ள வயலில் விவசாயம் செய்துவருகிறேன். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் தேதியில் நான் கோயம்புத்தூரில் எனது வயலில் தக்காளி, பாக்கு, தென்னந்தோப்பு ஆகியவற்றை கவனித்து வந்தேன் என்றால் சரிதான். சம்பவ தேதியில் நான் கோயம்புத்தூரில் விவசாயம் தான் பார்த்துக்கொண்டிருந்தேன் என்றாலும் நான் தளவாய்புரத்திற்கே வரவில்லை என்றாலும் சரியல்ல. எனது சித்தியின் கணவர்

இறந்தவுடன் எனது சித்தியை கோயம்புத்தூருக்கே அழைத்து சென்றுவிட்டேன் என்றாலும் வீட்டில் யாரும் இல்லை என்றாலும் வீட்டில் வாட்ச்மேன் மட்டும் தான் இருந்தார் என்றாலும் சரியல்ல. எனது சித்தி தளவாய்புரத்தில் தான் இருந்தார். சம்பவம் நடைபெறும்போது சுமார் அரைமணி நேரம் நான் அந்த இடத்தில் தான் இருந்தேன். சம்பவம் நடைபெற்று சுமார் அரைணி நேரம் சம்பவ இடத்தில் நான் இருந்தும், ஏன் நான் காவல் நிலையத்திற்கு போன் செய்யவில்லை என்றும், எனது சித்தியிடம் சொல்லி காவல் நிலையத்திற்கு போன் செய்யவில்லை என்றால் அந்த சமயத்தில் எனது சித்தியிடமும் என்னிடமும் போன் நம்பர் இல்லை. சம்பவ இடத்தில் நானும் எனது சித்தியும் இல்லை என்பதால் தான் காவல் நிலையத்திற்கு போன் செய்யவில்லை என்றால் சரியல்ல. இருவரும் சண்டை போட்டுக்கொண்டிருந்ததை யார் முதலில் பார்த்தார்கள் என்றால் சித்தி முதலில் வந்தார். நான் பின்னால் வந்தேன். கதவை திறந்து பார்த்தோம். வாட்ச்மேனிடம் காம்பவுண்ட் சுவர் கேட்டை பூட்டிவிட்டு இருக்கச்சொன்னோம். ஆனால் அவர் பூட்டினாரா இல்லையா என்று எங்களுக்குத் தெரியாது. நாங்கள் சென்று படுத்துவிட்டோம். காம்பவுண்ட் சுவரில் இரண்டு கேட்கள் உள்ளன. கார் வருவதற்கு ஒரு கேட்டும் சிறிய கேட்டும் உள்ளன. இறந்துபோன நீராவிக்கு வேறு பகைகள் உள்ளதால் வேறு யாரோ குத்தி நீராவியை எங்கள் வீட்டிற்குள் போட்டுவிட்டார்கள் என்றாலும் எங்கள் மீது வழக்கு வரும் என்பதால் நாங்கள் எதிரியை பொய்யாக குற்றவாளியாக்கி பொய்யாக சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல. இறந்தவரின் மனைவியும், மகளும் எங்கள் சித்தி வீட்டிற்கு சுமார் 10.45 மணிக்கு வந்தார்கள். அதன்பின்னர் இரவு 12.00 மணிக்கு போலிசார் வந்துவிட்டார்கள். போலிசார் எங்கள் முன்னிலையில் சாக்கடையில் இருந்து கத்தியை எடுத்தார்கள். போலிசார் என்னை விசாரித்தவுடன் நான் ஒருபேப்பரில் கையொப்பம் செய்தேன். அந்த கத்தியின் கைப்பிடி ஆரஞ்சு கலரில் இருந்தது. ஆரஞ்சு கலர் என்று போலிசார் தற்போது சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில்

சொல்கிறேன் என்றால் சரியல்ல. தனியார் ஆம்புலன்சின் பெயர் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். தனியார் ஆம்புலன்சின் பெயரை நான் எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், எங்கள் மீது கொலை கேஸ் வந்துவிடும் என்று பயந்து கொண்டு பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.